# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 6 ஆம் ஞாயிறு | 16 பிப்ரவரி 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**


### மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சூழலியல் (பணித்துவம்) அன்னை பூமியைக் காப்பாற்றும் துரித தூதுரைப் பணி செய்யும் உரிமையை ஏற்றுக்கொள்ள அழைப்பு

# ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர்

உலகின் பல்வேறு பகுதிகளில் , ஆயிரக்கணக்கான மக்கள் சுற்றுச்சூழலைப் பாதுக்காக்கப் பாடுபட்டதாலோ அல்லது பத்திரிகையாளர்களாக, சுரங்கம் மற்றும் சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல், நச்சுக்கழிவுகளை அகற்றுதல், கதிர்வீச்சு, தண்ணீர் பிரச்னைகள் இன்னும் பல அநீதிகளை முன்னுக்குக் கொண்டுவரும் அனைவரும் கொல்லப்பட்டவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? சுற்றுச்சூழலை தவறாகப் பயன்படுத்தோவோரைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் உறுதியாக நம்பியதால், அவர்கள் கொல்லப்பட்டனர். இது ஏழைகளையும் விளிம்புநிலையில் இருப்பவர்களையும் பெரிதும் பாதித்தது.



இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தான், நோட்ரே டேம் டெ நமூர் சகோதரிகளின் உறுப்பினரான சகோதரி டோரத்தி மே ஸ்டாங். இவர் அமெரிக்காவில் பிறந்து, பின்னர் பிரேசில் நாட்டின் குடிமகளாக மாறினார். அவர் 1966 ஆம் ஆண்டு பிரேசிலில் தனது ஊழியத்தை தொடங்கினார். பிரேசில் காடுகளை அழித்து, அதை பெரிய தோட்டங்களாக மாற்ற விரும்பும் பணக்கார மற்றும் சக்திவாய்ந்த பண்ணையாளர்களிடமிருந்து பிரேசில் நாட்டு மழைக்காடுகளைப் பாதுகாப்பதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர் ஏழைகளுக்காகப் பேசினார். மேலும் காடுகளை அழிக்காமல், சிறிய நிலங்களைக் கொண்டு விவசாயம் செய்வதன் மூலம் வன பொருட்களை பிரித்தெடுப்பதன் மூலம் விவசாயிகள் வாழ்க்கையை நடத்த உதவினார். மேலும் அவர்களின் நிலங்களைத் தேடிச்செல்லும் பண்ணையாளர்களின் சார்பாக வேலை செய்யும் குற்றவியல் கும்பல்களிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும் அவர் முயன்றார்.

பிப்ரவரி 12, 2005 அன்று சகோதரி ஸ்டாங் ஒரு சமூக கூடத்திற்கு நடந்து சென்றபோது, இரண்டு ஆயுதமேந்திய ஆண்கள் அவரைத் தடுத்தனர். அதையும் மீறி அவர் தொடர்ந்து அடியெடுத்து வைத்தபோது, ஆயுதமேந்திய ஆடவர் ஒருவரால் அவர் சுடப்பட்டார். முகம்குப்புற விழுந்த அவரின் தலையில் மீதமிருந்த நான்கு தோட்டக்களால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவருக்கு வயது 73.

அதன்பின்னர், அந்தக் கொலையின்போது புதர்களுக்குள் மறைந்திருந்த ஒரு சாட்சி, அந்த மனிதர்களால் தடுத்து நிறுத்தப்பட்டபோது, ஆயுதமேந்தியவர்களில் ஒருவர், அவரிடம் ஏதேனும் ஆயுதம் இருக்கிறதா என்று கேட்டதாக கூறினார். அவர் தன்னிடமிருப்பது ஒரே ஆயுதம், விவிலியம் என்று அவர்களிடம் கூறினார், மேலும் விவிலியத்திலிருந்து பேறுபெற்றோர் என்னும் இந்தப் பகுதியை அவர் வாசித்ததாக அந்த மனிதர் கூறினார். “ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர்”

இன்றைய நற்செய்தி வாசகத்தில், இயேசு இவ்வாறு கூறுவதை நாம் வாசிக்கக் கேட்டோம். “மானிடமகன் பொருட்டு, மக்கள் உங்களை வெறுத்து. ஒதுக்கிவைத்து, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும்போது, நீங்கள் பேறுபெற்றோர்” கிறிஸ்துவின் அன்புக்கும் அவரின் போதனைகளுக்கும் உண்மையாக இருந்து, கடவுளையும் அடுத்திருப்பவரையும் அன்பு செய்வதால் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூருவோம், அவர்களுக்காக மன்றாடுவோம்.

> படைப்புகளைப் பாதுகாக்காத, அதை வளர்ச்சியுறச்செய்யாத ஒரு கிறிஸ்துவர், கடவுளின் வேலையில் அக்கறை இல்லாத கிறிஸ்துவர்.
>
> திருத்தந்தை பிரான்சீஸ்

**இன்றைய இறைவார்த்தை:**

எரேமியா 17: 5-8

திருப்பாடல்: 1: 1-4, 6

1 கொரிந்தியர் 15: 12. 16-20

லூக்கா 6: 17,20-26


INTERNAL CIRCULATION ONLY
BUL 07/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org